O.S.12-2023

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.12/2023

வாதி தரப்பு 2வது சாட்சி சோலை என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சோலை | வயது | : | 42/2025 |
| தகப்பனார் பெயர் | : | கருப்பையா | தாலுகா | : | திருமயம் |
| கிராமம் | : | ராயவரம் | தொழில் | : | மளிகை கடை வியாபாரம் |

நாள்-13.10.2025

வா.சா.2

<u>முதல் விசாரணை</u>

1) நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சியாவேன். நான் முதல் விசாரணை நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விசயங்கள் உண்மையானது.

2) என்னிடம் காட்டப்படும் பிராமிசரி நோட்டில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் பிராமிசரி நோட்டில் உள்ள ஸ்டாம்பின் மேல் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து. அந்த பிராமிசரில் நோட்டில் பிரதிவாதி கைரேகை வைத்தார். அதை நான் பார்த்தேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.